
# சங்கத் தமிழில் அறிவியல்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்

பேரா. மு. துர்காதேவி



தமிழ்த்துறை

தியாகி தர்மக்கண் அமிர்தம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கன்னிராசபுரம்



Scanned with CamScanner

| | |
|---|---|
| நூல் | : சங்கத் தமிழில் அறிவியல் |
| பதிப்பாசிரியர் | : பேரா.மு.துர்காதேவி |
| முதற்பதிப்பு | : டிசம்பர் 2016 |
| வெளியீடு | : பாலபாரதி பதிப்பகம், சிவகாசி. |
| பக்கங்கள் | : 404 + 12 |
| ஒளியச்சு | : நான்சி கணினியகம், பாளையங்கோட்டை. |
| அச்சு | : முத்துலெட்சுமி அச்சகம், பாளையங்கோட்டை. |
| ISBN | : 978-81-909440-9-0 |

ISBN:978-81-909440-9-0

Scanned with CamScanner

29. சங்கமரபுசார் மருத்துவ மகத்துவம் ......136
*ரெ.சாந்தா*

30. புறநானூற்றில் யானைகள் ......141
*சே.சித்ரா*

31. புறநானூற்றில் தொழில்நுட்பம் ......146
*முனைவர் மா.ஆ.சுகந்தி*

32. காலமாரியும் வம்பமாரியும் ......150
*முனைவர்.இரா.சுதமதி*

33. குறுந்தொகை இலக்கியத்தில் உயிரினங்களின் வாழ்வியல் முறைகள் ......158
*த.சுதா*

34. நற்றிணையில் தாவரங்கள் ......163
*நா.செல்வம்*

35. சங்க இலக்கியம்-ஓர் அறிவியல் பார்வை ......168
*ஜெ.செல்வராணி*

36. குறிஞ்சிக் கலியில் இயற்கை வருணனை ......172
*செள.செலினா*

37. குறிஞ்சித் திணையில் மலைவளம் ......176
*அ.சேகராஜா*

38. முதுமக்கள் தாழியும் சங்கத் தமிழர் பண்பாட்டு மரபுகளும் ......180
*முனைவர்பி.சேர்மநாதன்*

39. எட்டுத் தொகையில் "புலி" ......185
*முனைவர்.சி.சொர்ணமாலா*

40. சங்க இலக்கியத்தில் திங்கள் ......191
*சு.தனலட்சுமி*

41. தொல்காப்பியரின் உயிர்க்கோட்பாடுகள் ......196
*மு.துர்காதேவி*

42. பத்துப்பாட்டில் அறிவியல் ......204
*தி.தேவி*

43. சங்க இலக்கியமும் யானையும் ......209
*முனைவர் மு.பஞ்சவர்ணம்*

Scanned with CamScanner

# எட்டுத் தொகையில் 'புலி'

*முனைவர்.சி.சொர்ணமாலா,*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*பாத்திமா கல்லூரி,*
*மதுரை.*

சூரியனில் இருந்து விழுந்த நெருப்புக் கோளத்தால். கால மாற்றத்தால் கல்லும் மண்ணும் தோன்றியது. ஆங்கே மழை பொழிந்து காடுகள் உருவாகின; அருவிகள், ஆறுகளாகி, வயல்களும், குளிர்ந்த கோளப்பகுதியின் பள்ளங்கள் கடலாகவும் மாறின. இது அறிவியல். நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் ஆகிய பஞ்சபூதங்களின் கூட்டமைப்பே இயற்கை உலகம் என்பதைப் புறநானூறும்,

"மண் திணிந்த நிலமும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இயதீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை" (பா. 380)

என்று இயம்பி அறிவியல் கோட்பாட்டுக்கு அடித்தளமிட்டுள்ளது. ஒன்றையொன்று சார்ந்து வாழும் உயிரினங்களால் இயங்கும் இந்தப் பஞ்சபூத உலகில் பல்வேறு விலங்குகள் இருப்பினும் இன்று அழிந்துவரும் உயிரினப்பட்டியலில் உள்ள 'புலி' குறித்த செய்திகளை எட்டுத்தொகை இலக்கியங்கள் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தேசிய விலங்கு - வாழ்விடச் செய்திகள்

பாந்தெரா தீகிரிஸ் என்னும் பூனையினத்தைச் சார்ந்தது புலி. வனவிலங்கு வாரிய பரிந்துரைப்படி 1969-ல் இந்திய

Scanned with CamScanner